










# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 23 04.06.2025




# आचार्य देवो भव
# (Aacharya Devo Bhava)

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## 10 +20 முத்துக்கள் உபதேசங்கள்



## 1. ஐவகை அகங்காரங்களாவன

1. தேகமே ஆத்மா என்றும் அத்துடன் தொடர்புடையவற்றில் இவை என்னுடையவை என்று எண்ணுதல்.

2. நான் எனக்கு உரியன் என்கிற ஸ்வதந்த்ராத்ம ப்ரமம், அதனடியாக வரும் மமகாரம்.

3. நான் தேவதாந்தரத்திற்கு சேஷபூதன், எனக்கு அது சேஷீ என்ற நிலை

4. நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். வேறு துணை தேவையில்லையென்ற அபிமானம்

5.ஒரு செயலைப் புரியும் போது நானே இதனைச் செய்கிறேன். எனக்காகப் பண்ணுகிறேன், நானே இதனை அனுபவிக்கிறேன் என்ற தன்னிடம் கர்த்ருத் போக்த்ருத்வாபிமானம் கொள்ளுதல். இப்படிப்பட்ட ஐவகை அகங்கார மமகாரங்கலையும் அடியறுக்க வேண்டும்.

## 2. ஆத்ம ஸமர்ப்பணம்

1. ஆநுகூல்ய ஸங்கல்பமாவது - உமக்கு அபிமதமாதையே இனி செய்வேன் என்ற ஸங்கல்பம்
2. ப்ராதி கூல்ய வர்ஜனமாவது - உமக்கு அனபிமதமானதைச் செய்யமாட்டேன் என்ற ஸங்கல்பம்.
3.மஹாவிச்வாஸம்- அவன் நம்மைக் கைவிடான் நிச்சயமாக ரக்ஷிப்பான் என்ற நம்பிக்கை.
4. கார்ப்பண்யமாவது - முன்பு சொன்ன ஆகிஞ்சந்யாநு ஸந்தானம் அல்லது அதனடியாக வந்த கர்வஹாநி அல்லது க்ருபாஜனக க்ருபண வருத்தி
5. கோப்த்ருத்தவ வரணமாவது - நீயே என்னை ரக்ஷிக்க வேண்டும் என்ற ப்ரார்தனை.
மோக்ஷம் பரம புருஷார்த்தம் - புருஷன் அர்த்திக்கக் கொடுத்தாலே புருஷார்த்தமாகும். அர்த்திக்காமலே கொடுத்தால் விருப்பம் இல்ாலாததைக் கொடுத்ததாகும். அது புநார்த்தமாகாத தன்றோ? ஆகையால் இதுவும் முக்யம். த்ரிஜடை சரணாகதியிலும், விபீஷண சரணாகதியிலும் பிரபத்தியின் 5 அங்கங்களையும் காணலாம்.

**3**.**திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம்** இவை மூன்றும் மிக முக்யமானவை. ஒன்றுக்கொன்று ஸம்பந்தம் உள்ளவை. அதிலும் திருமந்த்ரமாகிய திருவஷ்டாக்ஷரத் (எட்டெழுத்து மந்திரம்) தின் பெருமை சொல்லில் அடங்காதது. வேதம், இதிஹாஸம், புராணம் என அனைத்தும் இதற்குள் அடங்கும். இத்திருமந்திரத்தின் பொருளை அறிவதினால் இவ்வுலகத்தின் இயல்பை நாம் நன்கறியலாம். இதனால் ஜீவ-பரமாத்மாவிற்குள்ள தொடர்புகள் நன்கு விளங்கும். "எட்டெழுத்துக்குள் எல்லாம் எப்படி அடங்கும்? இத்தனை சிறிய மந்திரத்திற்கு சீரிய சக்தியுண்டா?" எனும் ஸந்தேகம் ஏற்பட அதற்காக ஸ்வாமி **சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுமாப்போலே** என்கிறார்.

முகம் பார்க்கும் கண்ணாடி சிறியதாயிருந்தாலும், பெரும் மலைகள், ஆகாசம் என அனைத்தும் அதில் தெரிகின்றதே. நாம் வாகனங்களை ஓட்டிச் செல்லும் போது பின்புறம் வரும் வாகனத்தை சிறிய கண்ணாடிகொண்டு (Rearview Mirror) தானே அறிகிறோம். கண்ணாடி மிகச்சிறியதாக இருந்தாலும், அது காட்டும் உருவம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் கண்ணாடிக்குள் அடங்குகிறதே. அதே

என்று இவ்வாக்யத்தைக் கூறுகிறார், ஸ்வாமி தேசிகன்.

**4.வாஸத்திற்கு ஏற்றதாக திருநாராயணீயத்தில் பகவான் கூறிய இடங்கள்**
தேவர்கள் பித்ருக்கள் நாராயணனிடத்தில் கலியுகத்தில் தர்மம் நலிந்து வருந்தும் போது நாங்கள் எங்கு வஸிப்பது என்று கேட்க ஆசார்யர்கள், நல்லொழுக்கசீலர்கள் அடக்கமுடையவர்கள் எங்கு வஸிக்கிறார்களோ அங்கு வசியுங்கள். வேதங்கள், யாகங்கள் தபஸ், ஸத்யம், புலனடக்கம், யாகம் இவை நடைபெறுமிடத்தில் வஸியுங்கள் அங்கு அதர்ம அடியெடுத்து வைக்காது என்று அருளிச் செய்தான். ஸ்த்தான விசேஷாதிகாரத்தில் உள்ளன.

**5**. **பரமபதத்திற்குச் செல்லத் தகுதியுடையவர்கள் யார்?**
என்பதற்குப் ப்ரமாணம் காட்டப்படுகிறது
'நிர்மமா: நிரஹங்காரா:' இத்யாதியால்

'மமகாரம், அஹங்காரம்' இவையில்லாதவர்களும் குளிர், வெய்யில் இவற்றைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவர்களும் இந்த்ரியங்களை வென்றவர்களும் த்யாந யோகத்தைப் ப்ரீதியுடன் செய்கின்றவர்களுமா யிருப்பவர்கள்தான் இந்த ஸ்ரீவைகுண்ட லோகத்திற்குச் செல்லத் தகுதியுடையவர்கள்.

**6. ஷடங்கயோகம்**
(1) பகவானுக்கும், அவன் அடியார்க்கும் அநுகூலமாக இருத்தல்
(2) பகவானுக்கும் அவன் அடியார்க்கும் எதிராக நடக்காது இருத்தல்
(3) பகவான் எப்படியும் காப்பாற்றுவான் என்கிற நம்பிக்கை
(4) பகவானே காப்பாற்ற வேண்டும் என்று வேண்டுதல்
(5) பகவானை அடைய, எந்த வழியும் இல்லையென்று சொல்லல்
(6) ஆத்மா, காக்க வேண்டிய பொறுப்பு, அதன் பலன் - யாவற்றையும் பகவானிடம் ஒப்படைத்தல்.
இது ஆறு அங்கங்களுடன் கூடிய சரணாகதி. ஆத்மாவை பகவானிடம் ஸமர்ப்பிப்பது - அங்கி. மீதி ஐந்தும் - அதற்கு அங்கம்.

**7. உடையவர், ப்ரும்ஹசூத்ரபாஷ்யத்துக்கு எழுதிய மங்கள ஸ்லோகம் -**

அசேஷ சிதசித் விஷ்ணு சேஷினே சேஷ சாயினே
நிர்மாலனந்த கல்யாண நிதயே விஷ்ணவே நம:

இவை 32 அக்ஷரங்கள்- இந்த அக்ஷரங்கள் 32 ப்ரும்ஹ வித்யைகளைக் குறிக்கிறது. எல்லா வேதங்களும் இந்த 32ல் அடக்கம்.

**8. யக்ஞப்ரகரணம்**
**உத்கீதம் (ஸாமம்) - ஸாமவேதம்** - தேவதைகளை, பகவானை ஸாமத்தாலே அழைக்க வேண்டும்.
**ரிக்வேதம்** - அழைத்து வந்தவர்களை, ரிக் வேதத்தாலே ஸ்தோத்ரம் பண்ண வேண்டும்.
**யஜுர் வேதம்** -தேவதைகளை, பகவானை யஜூர் வேத மந்த்ரங்களால் ஹோமம் பண்ண வேண்டும் - யக்ஞம் அப்போது ஹவிஸை அவர்கள் ஏற்பார்கள்.
**அதர்வ வேதம்** -ப்ரும்ஹாவாக இருந்து நடத்தி வைக்கிறார்.
**சரகசம்ஹிதை** - ஸஹஸ்ரநாமாபாராயண விதி இதில் உள்ளது.
**க்ஷாதுஸ்பதி** - என்கிற யக்ஞம், இதைச் செய்தால் நேத்ர பலம் கை கூடும். இதைச் செய்பவர்களுக்கு தலை மயிர் நரைத்து இருக்கக் கூடாது. பிள்ளை இருக்க வேண்டும். வேதத்தை பூர்ணமாக அத்யயனம் பண்ணி இருக்க வேண்டும்.


**9. இக்குணங்கள் படைத்த ஆசார்யனை அணுகுக.**

i. உயர்ந்த உபதேசபரம்பரையில் வந்தவன்
ii. உறுதியான எண்ணம்
iii. தோஷமிலாமை

iv. வேதப்பொருளறிவு
v. எம்பெருமானிடம் பக்தி
vi. நற்குணநிறைவு
vii. உண்மையானமை
viii. இடம் பொருளுக்கேற்ற ஸாதுக்களின் நிலை
ix. டம்பம், அஸூயை தவிர்த்தல்
X. விஷயப்பற்றின்மை
xi. நிலையான உறவுடைமை
xii. கருணை
xiii. தவறில் திருத்துகை
xiv. தன் ஆத்மா மற்றும் மற்றவர் நலம் பேணுகை

**10. இவை ஆசார்யக்ருத்யம்**
i. ஆத்மவிசார க்ரந்தங்கள் செய்தல் - பரிஷ்கரித்தல்
ii. பிறர்க்கு உபதேசித்தல்
iii. அர்ச்சாவதார ஸேவை
ப்ரபத்தி எனும் சரணாகதிக்கு மிக மிக முக்கியமானது மஹாவிச்வாஸம். அதாவது எம்பெருமான் தவிர்த்து வேறு எவரும் நம்மைக் காக்க வல்லர் அல்லர். மோக்ஷமளிப்பவன் அவன் ஒருவனே. நாம் மறந்தும் புறந்தொழா மாந்தராக (ஏனைய தெய்வங்களை எக்காலத்திலும் வணங்காதவர்களாக) இருக்க வேண்டும்.

**காப்பாற்றினாலும், கை விட்டாலும் பகவான் தவிர்த்து வேறொருவர் பக்கல் மனம் செல்லக் கூடாது. இந்த உறுதியான நிலைக்கு மஹா விச்வாஸம் என்பது பெயர்.**



## 'மனிதன் எந்த நிலையில் இருந்தாலும் தனது வர்ணம், ஆசிரமம், இயல்பு, சூழ்நிலை இவற்றிற்கேற்றவாறு விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்து கொண்டுதான் இருக்க வேண்டும்.'

இதை நிரூபிப்பதற்காக பகவத் கீதையில் (மூன்றாவது அத்யாயத்தில்) சில ச்லோகங்களில் வரிசையாகக் கீழ்க்கண்ட விஷயங்களைக் பகவான் கிருஷ்ணர் கூறினார்-

(1) கர்மம் செய்யாமல் கிடைக்காது (3/4) நைஷ்கர்ம்யம் என்பதான கர்மநிஷ்டை

(2) கர்மங்களைச் செய்யாமல் விடுவதால் மட்டும் ஞான நிஷ்டை பெற முடியாது (3/4)

(3) ஒரு கணம்கூடமனிதன் செயல் ஆற்றாமல் இருக்க முடியாது (3/5) .

(4) வெளிப்படையாகக் கர்மங்களை ஆற்றாமல் விட்டுவிட்டு, மனதில் அவற்றின் பயன்களான போகங்களையே நினைத்துக் கொண்டிருப்பது, போலி நடத்தை ஆகும் (3/6) .

(5) மனதையும், புலன்களையும் வசப்படுத்திப் பற்றற்றுக் கர்மங்களை ஆற்றுபவன் சிறந்தவன் (3/7).

(6) கர்மங்களைச் செய்யாமல் இருப்பதைக் காட்டிலும், கர்மங்களைச் செய்வதே மேல் (3/8).

(7) செயல் ஆற்றாமல் இருந்தால் அன்றாட வாழ்க்கை நடைபெறாது (3/8).

(8) வேள்வியாகச் செய்யப்படும் கர்மம் பந்தப்படுத்தாது; மோக்ஷத்தை அளிக்கும் (3/9).

(9) கர்மம் செய் என்பது ப்ரஜாபதியின் ஆணை. தன்னலம் கருதாது அதை ஏற்பதே மேன்மையைக் கொடுக்கும் (3/10,11).

(10) கடமைகளை திருடன் (3/12). ஆற்றாமல் அவற்றின் பயன்களை அனுபவிப்பவன்

(11) கடமைகளை ஆற்றி, வேள்வியில் மிகுந்ததை உடல் பேணுவதற்காக உண்பவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான் (3/13).

(12) வேள்விகளைப் புரியாமல், உடலைப் பேணுவதற்காக மட்டும் அன்னம் சமைப்பவன் பாவியாவான் (3/13).

(13) கடமைகளை ஆற்றாமல் விட்டுவிட்டுப் படைப்புச் சக்ரத்திற்குத் தடை போடுபவனுடைய வாழ்க்கை வீண்; பாவமயமானது (3/16).

(14) பற்றற்றுக் கர்மம் செய்வதால் பரமாத்மாவை அடையலாம் (3/19).

(15) முன்பு ஜனகர் முதலானோரும் கர்மங்களை ஆற்றித்தான் பேறு

(16) உலகத்தார், மேன்மக்களான பெரியோர்களின் வழியைப் பின்பற்றுவர். ஆகவே பெரியோர்களும் கர்மங்களை ஆற்றத்தான் வேண்டும் (3/21).

(17) பகவானுக்குக் கர்மங்களே கிடையா. ஆயினும் அவரும் உலகிற்கு வழிகாட்டியாகக் கர்மங்களை ஆற்றுகிறார் (3/22).

(18) ஞானிக்கும் கடமைகள் கிடையா. அவரும் உலகத்திற்கு வழிகாட்டியாகக் கர்மங்களை ஆற்றத்தான் வேண்டும் (3/25).

19) ஞானி கர்மங்களைச் செய்யாமல் விட்டுவிட்டோ, செய்யாமல் விடலாம் என்று உபதேசம் செய்தோ எவ்விதத்திலும் கர்மங்களைச் மக்களைக் கடமைகளிலிருந்து வழுவச் செய்யக் கூடாது. ஞானி தானும் கர்மங்களை ஆற்றி மற்றவர்களையும் ஊக்குவிக்க வேண்டும் (3/26).

(20) விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யாமல் விட்டுவிடுவதற்கு மக்களுக்கு உபதேசம் செய்து, கர்மத்தில் ஈடுபட்ட மனிதர்களைக் கலைக்காமல் இருப்பதுதான் ஞானிகளுக்கு உசிதம் ஆகும் (3/29).

